0033

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**கல்விப்பீடம்**

**கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023**

**இறுதிப்பரீட்சை – 2022/2023**

**மட்டம் - 06**

**EPU6234- ஆரம்ப வகுப்பறையை முகாமைத்துவம் செய்தல்**

**காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**திகதி:- 23.03.2024** **நேரம்: பி.ப. 01.30 - பி.ப 03.30**

**பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.**

## பகுதி – I

1. இலங்கையின் ஆரம்பப்பாடசாலை தொடர்பான " முகாமைத்துவம்" எனும் பதம் குறிப்பிடுவது யாது?
2. முகாமைத்துவ செயன்முறையில் **நான்கு (04)** அம்சங்களை சுருக்கமாக விளக்குக.
3. "ஆரம்பப்பாடசாலையில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் வகுப்பறை முகாமைத்துவம் பற்றிய அறிவு மிகவும் முக்கியமானது."
   மேற்குறிப்பிட்ட அறிக்கையுடன் உடன்படுகின்றீரா? **ஐந்து (05)** காரணிகள் மூலமாக உமது பதிலை நியாயப்படுத்துக.
4. இலங்கையின் ஆரம்பப்பாடசாலை தொடர்பான அடிப்படை கற்றல் தேர்ச்சிகள் **ஐந்தினை (05)** எழுதுக. அவற்றில் **ஒன்றை (01)** சுருக்கமாக விளக்குக.
5. வள முகாமையாளராக ஆரம்பப்பாடசாலை ஆசிரியரின் வகிபங்கை பற்றிச் சுருக்கமாக விளக்குக.
6. "மேற்பார்வையிடல்" எனும் எண்ணக்கருவை விளக்குக.
7. பிரதி அதிபரின் (கல்வி அபிவிருத்தி) **ஐந்து (05)** கடமைகளைப் பட்டியலிட்டு, அவற்றில் **ஒன்றைப் (01)** பற்றி சுருக்கமாக விளக்குக.
8. ஆரம்பப்பாடசாலையில் நிதி வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கான முக்கியத்துவத்தைப் பற்றி சுருக்கமாகக் கலந்துரையாடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. **i.** "கல்வி சீர்திருத்தம்" எனும் பதத்தை விளக்குக.

   **(05 புள்ளிகள்)**

   **ii.** 1972 கல்வி சீர்திருத்தத்திற்கு பிறகு, கல்வி முகாமைத்துவ அமைப்பு எவ்வாறு மாற்றமடைந்தது என்பதைப் பற்றி விபரிக்குக.

   **(07 புள்ளிகள்)**

   **iii.** 1997 அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி சீர்திருத்தத்திற்கு பிறகு ஆசிரியரது வகிபங்கு எவ்வாறு மாற்றமடைந்தது என்பதனை **ஐந்து (05)** உதாரணங்கள் மூலமாக கலந்துரையாடுக.

   **(08 புள்ளிகள்)**

10. **i.** இலங்கை கல்வி அமைச்சின் பிரதான கடமைகளை பட்டியற்படுத்துக.

**(05 புள்ளிகள்)**

**ii.** இலங்கை வலயக்கல்வி அலுவலகத்தின் முகாமைத்துவ கட்டமைப்புக்களை வரைக.

**(07 புள்ளிகள்)**

**iii.** இலங்கை வலயக்கல்வி அலுவலகத்தின் வகிபங்கினை **ஐந்து (05)** உதாரணங்கள் மூலமாக கலந்துரையாடுக.

**(08 புள்ளிகள்)**

11. **i.** இலங்கையின் ஆரம்பப்பாடசாலையின் வகுப்பறை முகாமைத்துவம் எனும் பதத்தால் நீர் கருதுவது யாது?

**(05 புள்ளிகள்)**

**ii.** ஆரம்பப்பாடசாலை ஆசிரியரொருவர் எவ்வாறாக வினைத்திறனான கற்றல் சூழலை வகுப்பறையில் உருவாக்குகிறார் என்பதை **ஐந்து (05)** உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**iii.** ஆரம்பப்பாடசாலை ஆசிரியரொருவர் வினைத்திறனான கற்றல் சூழலை வகுப்பறையில் உருவாக்கும் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் யாவை?

**(08 புள்ளிகள்)**

12. **i.** "இலங்கை ஆரம்பக்கல்வி முறையில் கற்பித்தல் - கற்றல் செயன்முறையின் தரத்தை மேம்படுத்த மேற்பார்வையிடல் முக்கியமானது."

மேற்குறிப்பிட்ட அறிக்கையுடன் உடன்படுகிறீரா? **ஐந்து (05)** காரணிகள் மூலம் உமது பதிலை நியாயப்படுத்துக.

**(10 புள்ளிகள்)**

**ii.** ஆரம்பப்பாடசாலையை மேற்பார்வையிடும் போது மேற்பார்வையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்க.

**(10 புள்ளிகள்)**

13. **i.** பின்வருவனவற்றிலிருந்து யாதாயினும் இரண்டிற்கு (02) சிறுகுறிப்பு வரைக.

**(I)** இலங்கையின் முன் சேவை (Pre – Service) ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

**(II)** இலங்கையின் சேவைக்கால (In - Service) ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

**(III)** ஆரம்பப்பாடசாலையில் இணைப்பாடவிதான செயற்பாடுகள்

**(IV)** ஆரம்ப பாடசாலை பௌதீக வள முகாமைத்துவம்

**(10x02=20 புள்ளிகள்)**

**- முழுப்பதிப்புரிமையுடையது -**